**DEPOSITION OF WITNESS**
**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR</u>**

CC.No.153/2023
Prosecution witness.09

பெயர் : ராஜாராம்பாண்டியன் தொழில் :

தந்தை/கணவர் பெயர் :பாலுச்சாமி கிராமம் :

வயது : தாலுகா :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

<u>12.03.2026</u>

(எதிரிகள் 1 முதல் 6 ஆஜர்).

**<u>முதல் விசாரணை :</u>**

**1)** நான் தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2023ம் வருடம் கீழத்தூவல் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது இளஞ்செம்பூர் காவல்நிலைய பொறுப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தேன். அப்போது இளஞ்செம்பூர் காவல்நிலைய குற்ற எண்.02/2023 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Actன் கீழான வழக்கு கோப்பை பார்வையிட்டு புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். மேற்படி வழக்கு கோப்பை ஏற்கெனவே சிறப்பு சார்பு ஆய்வாளர் கோவிந்தராஜன் என்பவர் முதற்கட்ட விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்து வைத்திருந்தார். நான் அந்த சாட்சிகளை மீண்டும் அழைத்து விசாரித்தபோது அவர்கள் மேற்படி சிறப்பு சார்பு ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. மேலும், சம்பவ இடமானது ஏற்கெனவே இருந்த ஆவணங்களை ஒத்து இருந்ததால் நான் தனியாக சம்பவ இடம் குறித்து ஆவணங்கள் தயார் செய்யவில்லை.

**2)** பின்னர் வழக்கின் சம்மந்தப்பட்ட எதிரிகளை தேடிவந்தநிலையில் கடந்த 08.03.2023ம் தேதி காலை 10.00 மணியளவில் சவேரியார்பட்டிணம் பேருந்து நிறுத்தம் அருகே நின்றுகொண்டிருந்த ஆஜர் எதிரிகளை ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட அவர்களை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து முறைப்படி திரேக பரிசோதனை செய்து அவர்கள் விசாரணைக்கு ஒத்துழைப்பு

செய்வதாக கூறியதாலும் எதிரிகளின் வயதை கருதியும் அவர்களை தக்க பிணையத்தில் விடுவித்தேன்.

**3)** பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 மற்றும் அசா.2 க்கு சிகிச்சை அளித்த முதுகுளத்தூர் அரசு மருத்துவர் திருமதி.உமாசங்கரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என மருத்துவர் வழங்கிய காயச்சான்றுதலுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்றேன். வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் முதற்கட்ட விசாரணை செய்த சிறப்பு சார்பு ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**4)** பின்னர் புலன் விசாரணையை முடித்து 09.03.2023 ம் தேதி எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) சம்பவமானது 06.10.2022 ம் தேதி நடந்தது என்பதை எனது புலன்விசாரணையில் தெரிந்துகொண்டேன். இந்த வழக்கின் முதல்தகவல் அறிக்கை 11.01.2023 ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு முதல்தகவல் அறிக்கை பதிவு செய்ய 3 மாதகாலம் தாமதம் ஏற்பட்டது குறித்து முதல்தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி அதுபற்றி எதுவும் குறிப்பிடவில்லை. நான் மருத்துவரை விசாரித்தபோது அசா.1 மற்றும் அசா.2 க்கு எந்த இடங்களில் காயம் ஏற்பட்டது என்பதை குறிப்பிட்டு எனது விசாரணையில் கூறினாரா என்றால் இல்லை. எந்த ஆயுதத்தால் காயம் ஏற்பட்டது என்பதாக அசா.1 மற்றும் அசா.2 மருத்துவரிடம் கூறினார்கள் என்பதை எனது விசாரணையில் மருத்துவர் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமானது காவல்நிலையத்திலிந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. புகார்தாரர் எங்கு வைத்து புகார் அளித்தார் என்பது குறித்து கூறஇயலுமா என்றால் எனக்கு நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் அதுபற்றி நினைவில் இல்லை.

2) சாட்சிகளை நான் விசாரித்தபோது ஏற்கெனவே சிறப்பு சார்பு ஆய்வாளரிடம் கூறிய சங்கதிகளை என்னிடம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நான் அசா.1 மற்றும் அசா.2 யை விசாரித்தபோது அசா.2 க்கு எந்த கையில் காயம் ஏற்பட்டது என்பது குறித்து குறிப்பிட்டு கூறினார்களா என்றால் வலது கையில் காயம் என்று கூறினார்கள். அவ்வாறு எனது விசாரணையில் அவர்கள் கூறவில்லை

என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அசா.2 யை 3 ம் எதிரி முகத்தில் அடித்திருப்பதாக என்னிடம் அசா.1 மற்றும் அசா.2 கூறினார்களா என்றால் இல்லை. அசா.1, அசா.2 ன் குடும்பத்தாருக்கும் மற்றும் எதிரிகளின் குடும்பத்தாருக்கும் இடையே உரிமையியல் வழக்கு RDO அலுவலகத்தில் நிலுவையில் இருந்து வந்து அவர்களிடையே முன்விரோதம் இருந்ததை குறித்தும் அசா.1 மற்றும் அசா.2 கூறினார்களா என்றால் ஆமாம் கூறினார்கள். எந்த தேதியில் புகார் அளிக்கப்பட்டது என்பது குறித்து எனது விசாரணையில் தெரியவரவில்லை என்றால் சரிதான்.

3) நான் கூறியபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர் அவர்களாகவே இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று கீழே விழுந்து காயம் ஏற்படுத்திக்கொண்டு எதிரிகளுடன் ஏற்கெனவே உள்ள முன்விரோதத்தில் அவர்களை பழிவாங்கும் நோக்கில் இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும், அதை அனுசரித்து நானும், சிறப்பு சார்பு ஆய்வாளரும் ஆவணங்களை நிலையத்தில் வைத்து தயார் செய்து பொய்யாக இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.